[2005 மார்ச் 24

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் 1997 ஆம் ஆண்டு நீல நாக்கு நோயால் இறந்த ஆடுகளுக்கு, ஆடு ஒன்றுக்கு ரூ.300 மட்டுமே நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இயற்கை இன்னல்களால் இறந்த ஆடு ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் இழப்பீடு வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதே அளவு நிவாரணத் தொகை நீல நாக்கு நோயால் பாதிக்கப்பட்டு இறந்த ஆடுகளுக்கும் வழங்குவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 265 முதல் 267 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 172 முதல் 174 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10-05

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

2005 மார்ச் 24]

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் 109 மற்றும் 110 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 11—வணிக வரித் துறை – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

(ஆ) கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை– எழுதுபொருள் மற்றும் அச்சு

(இ) கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

(ஈ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை

(உ) கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(ஊ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 23-3-2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின் மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய அரிய கருத்துகளுக்கு வருவாய்த் துறையின் சார்பாக என்னுடைய பதிலுரை... (குறுக்கீடு)